பயன்படுகிறது. திரையரங்கில் | குனா ஜி.ஆர். கற்பகம் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

# தமிழ்நாடு அரசு - இந்து சமய அறநிலையத்துறை

# அருள்மிகு தண்டுமாரியம்மன் திருக்கோயில்

## அவினாசி சாலை, கோவை–18

நாள்: 24.12.2025

## வேலை வாய்ப்பு விண்ணப்பம் கோரும் விளம்பர அறிவிப்பு

இத்திருக்கோயிலில் கீழ்க்கண்ட விவரப்படியான காலிப்பணியிடங்களுக்கு பணியாளர்கள் நியமனம் செய்ய தகுதியுள்ள இந்து மதத்தினை சார்ந்த நபர்களிடமிருந்து 24.01.2026ம் தேதி மாலை 05.45 மணிக்குள் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. இதர விவரங்கள் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில் வந்து தெரிந்து கொள்ளலாம்.

| வ. எண் | அங்கீகரிக்கப்பட்ட பணியிட விவரம் | பணியிடங்கள் எண்ணிக்கை | ஊதிய விகிதம் | அரசு விதி எண்.114/நாள்.03.09.2020ன்படி தேவையான அடிப்படை தகுதிகள் |
|---|---|---|---|---|
| 1. | ஓதுவார் | ஒன்று | Pay Matrix 13, Level 1 ரூ.12600 - ரூ.39900 | 1. தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்.<br>2. சமய நிறுவனங்கள் அல்லது அரசு நிறுவனங்கள் அல்லது ஏனைய யாதொரு நிறுவனங்கள் நடத்தும் மூன்றாண்டு பாடப்பிரிவை முடித்ததற்கான தேவாரப்பள்ளி வழங்குகின்ற சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும் |
| 2. | இரவுக்காவலர் | ஒன்று | Pay Matrix 12, Level 1 ரூ.11600 - ரூ.36800 | தமிழில் படிக்கவும், எழுதவும் அறிந்திருக்க வேண்டும். |

குறிப்பு:–

1. விண்ணப்பதாரர் 01.07.2025 அன்று 18 வயது பூர்த்தி அடைந்தவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
2. தகுதியான விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்ப படிவம் திருக்கோயில் அலுவலகத்தில், அலுவலக நேரத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம். மேலும், இந்து சமய அறநிலையத்துறை https://hrce.tn.gov.in என்ற இணையதளத்திலும் விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

திருமதி. மு.பேபிஷாலினி, எம்.ஏ., எல்.எல்.பி.,
செயல் அலுவலர்

சு.நாகலெட்சுமி
அறங்காவலர் குழுத் தலைவர்,
ரா.கலைமணி
ஜெ.மனோஜ்குமார்
பா.ஸ்ரீவத்சன்
எஸ்.பத்ரசாமி
அறங்காவலர்கள்

வெ.ஆ.எண்.699/2025/செ.ம.தொ.அ./கோவை

<u>வேலை வாய்ப்பு விண்ணப்ப படிவம்</u>

| சமீபத்தில் எடுக்கப்பட்ட பாஸ்போர்ட் அளவு புகைப்படம் |
|---|

## <u>அருள்மிகு தண்டுமாரியம்மன் திருக்கோயில்,</u>

<u>அவினாசி சாலை, கோவை–18</u>

| | | | |
|---|---|---|---|
| | பதவியின் பெயர் | : | |
| 1. | பெயர் | : | |
| 2. | தந்தை / கணவர் பெயர் | : | |
| 3. | நிரந்தர முகவரி | : | |
| 4. | பிறந்த தேதி மற்றும் வயது (சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 5. | இந்து மதத்தினை சார்ந்தவரா? (சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 6. | தமிழ்நாட்டினை சார்ந்தவரா? (ஆதார் கார்டு நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 7. | கல்வித்தகுதி மற்றும் இதர தகுதிகள் (சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 8. | திருக்கோயில்களில் பணிபுரிந்த முன் அனுபவம் இருப்பின் சான்றிதழ் நகல் இணைக்கப்பட வேண்டும் | : | |
| 9. | விண்ணப்பத்தாரரின் குடும்பத்தை சார்ந்தவர் யாரேனும் இத்திருக்கோயில் பணியாற்றி வருகின்றனரா? ஆம் எனில் விபரம் | : | |
| 10. | நன்னடைத்தை சான்று (அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளிடமிருந்து) | : | |
| 11. | பொதுவானவை | : | |

மேலே கூறப்பட்ட வரிசை எண் 1 முதல் 11 வரையிலான விபரங்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் இந்து மத்த்தை சார்ந்தவன் என்றும் இதன் மூலம் உறுதி அளிக்கின்றேன்.

நாள் :

இடம் : விண்ணப்பத்தாரரின் கையொப்பம்

**நிபந்தனைகள்**

| | |
|---|---|
| 1. | விண்ணப்பதாரருக்கு 01.07.2025–ல் 18 வயது பூர்த்தி அடைந்தவராகவும், 45 வயதிற்குட் பட்டவராகவும் இருத்தல் வேண்டும். |
| 2. | இந்து மதத்தை சார்ந்தவராக தகுதியானவர்களாக இருத்தல் வேண்டும் |
| 3. | தொற்றுநோய் மற்றும் உடல் அல்லது மனநிலை குறைபாடுகள் மற்றும் கண் குறைபாடுகள் உள்ளவர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள். |
| 4. | நீதி மன்றத்தில் தண்டனை அடைந்தவர்கள், பட்ட கடனை தீர்க்க முடியாதவர்கள் என நீதிமன்றத்தில் தீர்மானிக்கப்பட்டவர்கள், அரசுப் பணியிலிருந்தும் பொதுஸ்தாபனங்களில் இருந்தும் இதர திருக்கோயில்களில் இருந்தும் பணிபுரிந்து தண்டனை காரணமாக பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள், இத்திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள், அவர்களின் வாரிசுதாரர்கள் ஆகியோர்கள் மேற்படி பணிக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள். |
| 5. | நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும். இதற்கு அரசிதழ் பதிவு பெற்ற அரசு அலுவலர்களிடமிருந்து 01.07.2025க்கு பின்னர் பெறப்பட்ட நன்னடத்தை சான்று சமர்ப்பிக்கவேண்டும். |
| 6. | திருக்கோயில் பணியில் அனுபவம் உள்ளவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| 7. | விண்ணப்பம் அனுப்பப்படும் மேல் உறையின் மீது கண்டிப்பாக பதவியின் பெயர் குறிப்பிட்டு அனுப்பப்பட வேண்டும். |
| 8. | வரப் பெறும் விண்ணப்பங்கள் அனைத்தும் சரிபார்க்கப்பட்டு தகுதி உள்ள நபர்களுக்கு மட்டுமே நேர்முக தேர்விற்கு அறிவிப்பு அனுப்பப்படும். |
| 9. | நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு பயணப்படி ஏதும் வழங்கப்பட மாட்டாது. |
| 10. | பணி நியமனம் இந்து சமய அறநிலையத்துறை சட்ட விதிகளுக்கும், பணியாளர் பணிவிதிமுறைகள் அரசாணை எண் 114 க்கும் உட்பட்டதாகும். |
| 11. | விண்ணப்பதாரர் நல்ல உடல் ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும். மருத்துவ தகுதிச்சான்று சமர்ப்பிக்க வேண்டும். |
| 12. | இந்த வேலை வாய்ப்பு அறிவிப்பு வெளியிடும் தேதிக்கு முன்னதாக வரப் பெற்ற விண்ணப்பங்களும் 24.01.2026–ம் தேதி மாலை 5.45 மணிக்குப் பின்னர் வரப் பெறும் விண்ணப்பங்களும் மாதிரி படிவத்தில் கண்டுள்ளவாறு தேவையான விவரங்கள் மற்றும் இணைப்புகளுடன் வரப் பெறாத விண்ணப்பங்களும், மாதிரி படிவத்தின்படி இல்லாமல், வேறு வகையில் உருவாக்கப்பட்ட விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். |
| 13. | விண்ணப்பதாரர் கல்விச்சான்று, முகவரிக்கான அத்தாட்சி, முன் அனுபவச் சான்று, இதர தகுதிக்கான சான்று ஆகிய சான்றிதழ்களில் சான்றொப்பம் இடப்பட்ட புகைப்பட நகல்கள் இணைக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் அசல் சான்றிதழ்களை அனுப்பக் கூடாது. |
| 14. | நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர் மட்டுமே அசல் சான்றிதழ்களை எடுத்து வர வேண்டும். |
| 15. | காலிப் பணியிடங்களுக்கு ஏற்கனவே விண்ணப்பித்திருந்தாலும், இவ்விளம்பரத்திற்கு பின்னர் புதியதாக விண்ணப்பித்தல் வேண்டும். |
| 16. | இதர விவரங்களை அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். |

மு.பேபிஷாலினி எம்.ஏ., எல்.எல்.பி.,

**செயல் அலுவலர்**

சு.நாகலெட்சுமி

**அறங்காவலர் குழுத் தலைவர்.**

ரா.கலைமணி

ஜெ.மனோஜ்குமார்

பா.ஸ்ரீவத்சன்

எஸ்.பத்ரசாமி

**அறங்காவலர்கள்.**

நாள் : 24.12.2025